பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**10 08 2026 MONDAY 7.15 PM**

ஆகாஷவாணி

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

**1)** வரி விதிப்பு மற்றும் அதுதொடர்பான சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

**2)** மக்களவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

**3)** சாலை விபத்துகளால் உயிரிழப்புகளே ஏற்படக்கூடாது என்பதை இலக்காக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

**4)** மத்தியப்பிரதேசத்தில் கால்வாயை கடக்க முயன்ற வேன் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டதில் **9** பேர் உயிரிழந்தனர்.

**5)** **Peru** பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா **3** தங்கம் உட்பட எட்டு பதக்கங்களை வென்றது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

வரி விதிப்பு மற்றும் அதுதொடர்பான சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

மக்களவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவிற்கு மாநிலங்களவை ஒப்புதல் அளித்தது.

முன்னதாக, இந்த மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், உற்பத்தித்துறையை வலுப்படுத்தும் நோக்கில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதாக கூறினார்.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைக்கு கட்டணங்கள் வசூலிப்பதற்கான அம்சங்கள் எதுவும் இந்த மசோதாவில் இடம்பெறவில்லை என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் திட்டவட்டமாக கூறினார்.

<<<<<>>>>>>

மக்களவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

மக்களவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெறாமல் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து அவர் வேதனை தெரிவித்தார்.

கேள்விநேரத்தை நடத்தவும், முக்கிய மசோதாக்கள் மீதான விவாதத்தை அனுமதிப்பதற்கும் அனைத்து கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் திரு ஓம்.பிர்லா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

மாணவர் போராட்டம் தொடர்பான பிரச்சினை குறித்து மக்களவையில் விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இந்த விவாதத்திற்கு உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பதிலளிப்பார் என்று கூறினார்.

வெளிநடப்பில் ஈடுபடாமல் இந்த பதிலுரையை முழுமையாக கேட்பதாக எதிர்க்கட்சிகள் உறுதியளிக்க வேண்டும் என்றும் திரு கிரண் ரிஜிஜூ கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

பெட்ரோலுடன் 20 சதவீதத்திற்கும் கூடுதலாக எத்தனாலை கலப்பது குறித்து எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை என்று பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரவித்த அவர், அறிவியல் பூர்வமாக ஆய்வு மேற்கொண்ட பின்னரே இதுதொடர்பாக முடிவெடுக்கப்படும் என்று கூறினார்.

எண்ணெய் நிறுவனங்கள், வாகன உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையை சேர்ந்தவர்களுடன் விரிவாக ஆலோசனை நடத்தப்பட்ட பின்னரே உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

<<<<<>>>>>>

சாலை விபத்துகளால் உயிரிழப்புகளே ஏற்படக்கூடாது என்பதை இலக்காக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாடு முழுவதும் அதிகமான விபத்துகள் ஏற்படும் இடம் என 100 மாவட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக கூறினார்.

இப்பகுதிகளில் விபத்துகளை தடுப்பதற்கான சாலை வசதிகள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சாலைப்பணிகளில் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்களும் சாலை பாதுகாப்பு விதிகளை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்றும் திரு நிதின்கட்கரி கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

உயிரி தொழில்நுட்பத்துறையில் தனியார் தொழில்துறையினர் கூடுதலாக பங்களிக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் உயிரி தொழில்நுட்ப தொழில்துறை ஆராய்ச்சி நிதியுதவி குழுமத்தின் அதிகாரிகளோடு ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

உள்நாட்டு தொழில்நுட்பத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

உயிரி தொழில்நுட்பத்துறையில் புதுமை கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கம் அளிக்கப்படுவதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

சிவில் விமான போக்குவரத்துத் துறையில் மகளிரின் பங்களிப்பை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த துறையில் மகளிரின் பங்களிப்பு தற்போது **15** சதவீதமாக உள்ளது என்றார்.

இதனை **25** சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

சர்வதேச உயிரி எரிபொருள் தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

இதனையொட்டி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

<<<<<>>>>>>

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சரத்பவார் பிரிவை சேர்ந்த திருமதி **Supriya Sule** தலைமையில் அக்கட்சியை சேர்ந்த நாடாளுமன்றக்குழுவினர் இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து பேசினர்.

மகாராஷ்ட்ராவின் வளர்ச்சி குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக திருமதி **Supriya Sule** பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அக்கட்சி தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய உள்ளதாக தகவல்கள் வெளியான நிலையில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

<<<<<>>>>>>

தில்லியில் மகளிர் நிதியுதவி திட்டத்திற்கான விண்ணப்பப்பதிவு தகுதியானவர்கள் சேர்க்கப்படும் வரை மேற்கொள்ளப்படும் என்று முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

தில்லி சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின்கீழ் மகளிருக்கு மாதாந்தோறும் **2** ஆயிரத்து **500** ரூபாய் வழங்கப்படும் என்றார்.

<<<<<>>>>>>

நாடு முழுவதும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் தற்போது நடைபெற்று வருகிறது.

மணிப்பூரில் இந்த இயக்கத்தை அம்மாநில முதலமைச்சர் திரு **Yumnam Khemchand Singh** தொடங்கிவைத்தார்.

ஆயிரக்கணக்கானோர் இருசக்கர வாகனங்களில் இப்பேரணியில் பங்கேற்றனர்.

மேற்குவங்கத்தில் அம்மாநில முதலமைச்சர் திரு சுவேந்து அதிகாரி இந்த இயக்கத்தை தொடங்கிவைத்தார்.

இந்த இயக்கத்தின்கீழ் உத்தரப்பிரதேசத்தின் கோரக்பூரில் நடைபெற்ற பேரணியில் அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் பங்கேற்றார்.

மத்தியப்பிரதேசத்தின் ஜபல்பூரில் அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் தலைமையில் நடைபெற்ற பேரணியில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் இளநிலை மருத்துவப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான தரவரிசை பட்டியலை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு அருண்ராஜ் இன்று வெளியிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்கள் அட்டவணையில் தெரிவித்துள்ளபடி கலந்தாய்வில் பங்கேற்குமாறு கேட்டுக்கொண்டார்.

***(Sound Byte — அருண்ராஜ் - 45 Sec.)***

<<<<<>>>>>>

ஜார்கண்டில் தேர்வு முறைகேட்டுக்கு எதிராக மாணவர்கள் மேற்கொண்டுள்ள போராட்டம் 17-ஆவது நாளாக இன்றும் நீடிக்கிறது.

இந்த முறைகேடு தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என்று கோரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று, இதன் ஒருபகுதியாக அம்மாநில சட்டப்பேரவையை நோக்கி மாணவர்கள் பேரணியாக சென்றனர்.

காவல்துறையினர் அவர்கள் மீது தண்ணீரை பீய்சியடித்து பாதியிலேயே தடுத்து நிறுத்தினர்.

மாணவர்களுக்கு ஆதரவாக முதலமைச்சர் இல்லத்தின்முன் போராட்டத்தில் ஈடுபட்ட பிஜேபி நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர்.

தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை போராட்டம் தொடரும் என்று மாணவர்கள் அறிவித்தனர்.

இருப்பினும், மாணவர்களின் 98 சதவீத கோரிக்கைள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, இந்த முறைகேடு தொடர்பாக அமலாக்கத்துறையினர் விசாரணையை தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

மத்தியப்பிரதேசத்தில் கால்வாயை கடக்க முயன்ற வேன் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டதில் 9 பேர் உயிரிழந்தனர்.

**Rajgarh** மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் பெய்த கனமழையின்போது இந்த வேன் கால்வாயை கடக்க முயன்றதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

கால்வாயை கடக்க வேண்டாம் என்று அப்பகுதி மக்கள் விடுத்த எச்சரிக்கையையும் மீறி வேன் ஓட்டுநர் வாகனத்தை ஓட்டிச் சென்றதாகவும் காவல்துறையினர் கூறினர்.

<<<<<>>>>>>

ரஷ்யா மீது யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் **12** பேர் உயிரிழந்தனர், **39** பேர் காயமடைந்தனர்.

**Nizhnekamsk** நகரில் உள்ள கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>>

**Peru** பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா **3** தங்கம் உட்பட **8** பதக்கங்களை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் **Umesh Vikram Kumar** மற்றும் **Yogesh**-ம், இரட்டையர் பிரிவில் **Deep Ranjan Bisoyee — Takar Biri** இணையும் தங்கப்பதக்கம் வென்றனர்.

---------------

அஸ்தானாவில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் - **Martin Borisiouk** இணை பட்டம் வென்றது.

------------

கொரியாவுக்கு எதிரான டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Sumit Nagal, Dhakshineswar Suresh, Manas Dhamne** உள்ளிட்டோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

**<<<<<END>>>>>>**